குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 88 / 2019

அ.சா.1

2023–ம் ஆண்டு அக்டோபர் 18–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. எல்லமுனி | ஜாதி | |
| தந்தை பெயர் | நடேசன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.20 மணி,

Accused (Suryamoorthi) present. Advocate Mr. P.Kathiravan present for advocate Mr. Ezhilarasu for accused.

**முதல் விசாரணை.**

1. நான் நல்லூரில் வசித்து தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தொழில் நுட்ப உதவியாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.09.2018 ம் தேதி சுமார் மாலை 04.00 மணிக்கு மேல் தருமபுரி – சேலம் செல்லும் ரோட்டின் தீவட்டிப்பட்டி ஐயங்கார் பேக்கரி அருகே உள்ள சர்விஸ் ரோட்டில் எனது அப்பா நடேசன் மேற்படி ஐயங்கார் பேக்கரியில் டீ குடித்துவிட்டு TVS 50 இருசக்கர வாகனம் பதிவு எண் 9255 ல் ரோட்டில் திரும்பிய போது தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து தருமபுரி நோக்கி சென்ற 8688 என்ற பதிவு எண் கொண்ட Tata 909 வாகனம் சர்விஸ் ரோட்டில் தவறான வழியில் வந்து எனது அப்பா சென்ற இருசக்கர வாகனத்தில் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2. மேற்படி தகவலை எனது சித்தப்பா அண்ணாதுரை எனக்கு போன் மூலம் தெரிவித்தார். எனது அப்பா நடேசனை மருத்துவனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும் கூறினார். நான் சேலத்தில் உள்ள சரவணா மருத்துவமனைக்கு சென்று எனது அப்பாவை பார்த்தபோது எனது அப்பாவிற்கு பின் தலையில் அடிப்பட்டு ரத்தம் வந்துக்கொண்டு இருந்தது. இடது பக்க மார்பில் எலும்பு உடைந்து ரத்தம்

வந்துக்கொண்டு இருந்தது. இடது காலின் மூட்டு உடைந்து இருந்தது.

3. அதன் பிறகு எனது அப்பாவை சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்து சென்ற போது அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக கூறினார். அதன் பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் கையெழுத்து என்னுடையது. **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

4. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. விபத்து நடந்த மறுநாள் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரி.

**மறு விசாரணை**.இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 12.34 மணி,

ஒம்/—ச.ஷர்மிளா.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்